**செ.வெ.எண்:-18/2020** **நாள்:07.04.2020**

**திண்டுக்கல் மாவட்டம்**

**கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்கும் வகையில் கண்காணிப்பு பகுதிகளான நத்தம் பேரூராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம், தர்பார் நகர், அண்ணாநகர், மேலத்தெரு மற்றும் கோசுகுறிச்சி ஊராட்சி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

---

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்கும் வகையில் நத்தம் பேரூராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகள் மற்றும் கண்காணிப்பு பகுதிகளான மீனாட்சிபுரம், தர்பார் நகர், அண்ணாநகர், மேலத்தெரு மற்றும் கோசுகுறிச்சி ஊராட்சி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் இன்று(07.04.2020) ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது:-

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் பரவலை தடுக்கும் வகையில் பல்வேறு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் அலுவலர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக சாலைகள் மற்றும் பொது இடங்களில் கிருமிநாசினி தெளிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் தீயணைப்புத்துறையினரின் வாகனம் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. தீயணைப்பு வாகனம் மூலமாக கிருமிநாசினி சாலைகளில் தெளித்து துாய்மைப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நத்தம் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட மீனாட்சிபுரம், தர்பார் நகர், அண்ணாநகர், மேலத்தெரு மற்றும் கோசுகுறிச்சி ஊராட்சி ஆகிய பகுதிகள் கண்காணிப்பு பகுதிகளாக உள்ளன. இப்பகுதியில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டுள்ளதால், எனவே, இப்பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் வகையில் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நோய் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அருகாமையில் வசிக்கும் நபர்களுக்கும் நோய் தொற்று ஏற்படாதவண்ணம் பொது சுகாதார நெறிமுறைகளின்படி இப்பகுதிகளில் நோய் தொற்று கட்டுப்படுத்தும் நடவடிக்கை (Containment Plan) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இப்பகுதிகளில் பொதுமக்கள் தேவையின்றி நடமாடுவதை கட்டுப்படுத்துவது அவசியமாகிறது. மேலும், நோய் தொற்று குறித்து பொது சுகாதாரத்துறை களப்பணியாளர்கள் மூலம் இப்பகுதியில் உள்ள அனைத்து குடும்பங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு ஆய்விற்கு வரக்கூடிய அலுவலர்களுக்கு தேவையான விபரங்களை பொது மக்கள் வழங்க வேண்டும். தமது குடும்பத்தில் எவருக்கேனும் இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருப்பின் அதனை தெரிவிக்க வேண்டும்.

இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் வெளியிடங்களுக்கு செல்லவும், வெளிஆட்கள் இப்பகுதிகளுக்கு வருவதை தவிர்க்கும் வகையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதனால் இந்த பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதில் இடர்பாடு இல்லாத வகையில் வாகனங்கள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யவும், டோர்டெலிவரி முறையில் மருந்துகள், மளிகை பொருட்கள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்து வரும் வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்கப்பட்டும், அதனை எடுத்து வரும் பணியாளர்கள் உரிய முகக்கவசம் உட்பட பாதுகாப்பு உபகரணங்கள் அணிந்து அத்தியாவசியப் பொருட்களை வினியோகம் செய்திட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மீனாட்சிபுரம், தர்பார் நகர், அண்ணாநகர், மேலத்தெரு மற்றும் கோசுகுறிச்சி ஊராட்சி ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் வெளியே வருவதை தவிர்த்து, வீட்டில் இருந்தபடியே தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவால் அத்தியாவசிய தேவைகளுக்காக பொதுமக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக தமிழக அரசு பல்வேறு வழிகாட்டுதல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கி வருகிறது. அதன்படி, பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து அலுவலர்கள் மூலமாக கண்காணித்து வருகிறது. எனவே, பொதுமக்கள் சமூக பரவலை தடுக்கின்ற வகையில் வெளியிடங்களில் அதிகளவில் கூடாமல் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, நத்தம் வட்டாட்சியர் திரு.ராதாகிருஷ்ணன், நத்தம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சரவணக்குமார் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---